செ.வெ.எண்: 303

நாள்: 25/5/11

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (25.5.2011) தலைமைச் செயலகத்தில் தென்னிந்திய திருச்சபையின் தலைமை பிரதமப் பேராயர் திரு. வசந்தகுமார் அவர்கள் தலைமையில் திருச்சபையின் பேராயர்கள் மற்றும் நிருவாகிகள் நேரில் சந்தித்தார்கள்.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலில் மகத்தான சாதனை வெற்றி பெற்று தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது வாழ்த்துகளையும், ஆசிகளையும் வழங்கினார்கள்.

மேலும், தென்னிந்திய திருச்சபை சார்பில் தமிழ்நாட்டில் 8 பேராயங்கள் இருப்பதாகவும், அதில் 21 இலட்சம் பேர் உறுப்பினர்களாக உள்ளதாகவும், இவர்களின் நல்லாதரவும், ஒத்துழைப்பும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு என்றும் தொடரும் என்றும் அவர்கள் அந்த சந்திப்பின் போது உறுதியளித்தார்கள்.

சிறுபான்மை சமூகத்தின் அனைத்து பிரச்சனைகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தீர்த்து வைப்பார்கள் என்பதில் தாங்கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர். சந்திப்பின் முடிவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை முதலமைச்சராக வெற்றி பெறச் செய்தமைக்கு ஆண்டவனுக்கு நன்றி தெரிவித்தும், ஏழை, எளிய மக்கள் வாழ்வு ஒளிர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டியும் பிரார்த்தனை செய்தனர்.

தென்னிந்திய திருச்சபை பேராயர்களின் நல்வாழ்த்துகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமது நன்றியைத் தெரிவித்தார்கள்.

இந்தச் சந்திப்பின் போது, கன்னியாகுமரி பேராயத்தைச் சேர்ந்த உதவி பிரதம பேராயர் ஜி.தேவகடாட்சம், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த டோர்னக்கல் பேராயர் டாக்டர் பி.எஸ்.தேவமணி, இலங்கை, யாழ்ப்பாணம் பேராயர் டாக்டர் எஸ்.டேனியல் தியாகராஜா, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கரீம் நகர் பேராயர் பி.சூர்ய பிரகாஷ், கர்நாடகா தெற்கு பேராயர் டாக்டர் ஜே.எஸ். ஜான் சதானந்தா, மத்திய கேரளா பேராயர் தாமஸ்

கே.உம்மன், சென்னை பேராயர் டாக்டர் வே.தேவசகாயம், ஆந்திரா மாநிலம், நந்தியால் பேராயர் டாக்டர் பி.ஜே.லாரன்ஸ், வடக்குக் கேரளா பேராயர் டாக்டர் கே.பி.குருவில்லா, ஆந்திர மாநிலம், ராயலசீமா பேராயர் டாக்டர் கே.பி.ஏசு வரபிரசாத், திருச்சி – தஞ்சாவூர் பேராயர் டாக்டர் ஜி.பால் வசந்தகுமார், திருநெல்வேலி பேராயர் ஜே.ஜே.கிறிஸ்துதாஸ், சி.எஸ்.ஐ. சினாடு பொருளாளர் டாக்டர் பென்னட் ஆபிரகாம், சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் சி.ராபர்ட் புரூஸ். மதுரை பேராயர் கிறிஸ்டோபர் ஆசிர் மற்றும் முன்னாள் அமைச்சர் திரு. தளவாய் சுந்தரம் ஆகியோர் உடனிருந்தனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள்: 25.5.2011